செ.வெ.எண்.16 நாள். 06.04.2017

# பத்திரிக்கை செய்தி
# மானியத்துடன் தொழிற்கடன் !
# இளைஞருக்கு அரிய வாய்ப்பு !!

”வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ” - UYEGP (UNEMPLOYED YOUTH EMPLOYMENT GENERATION PROGRAMME) என்ற தொழிற் கடன் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்டத் தொழில் மையம், திருநெல்வேலி மூலமாக திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிதாக தொழில் ஆரம்பிக்க அதிகபட்சமாக திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் வரை உற்பத்தி தொழில்களுக்கும், ரூ.3 இலட்சம் வரை சேவை தொழில்களுக்கும், ரூ.1 இலட்சம் வரை வியாபார தொழில்களுக்கும் 25 விழுக்காடு மானியத்துடன் கடன் உதவிகளுக்கான பரிந்துரைகள் செய்யப்படும்.

இத்திட்டத்தில் பயன் பெற குறைந்த பட்சம் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.

குறைந்த பட்சம் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.1,50,000/-க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகள். 7 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான கட்டாய பயிற்சி மேற்கொண்ட பின்பு வங்கிகள் வழியாக கடனுதவி வழங்கப்படும்.

| பயனாளிகளின் வகை | வயது வரம்பு | பயனாளியின் பங்கு தொகை |
|---|---|---|
| பொதுப் பிரிவினர் | 18 முதல் 35 வரை | 10 % |
| சிறப்பு வகை (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், அனைத்து பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள்) | 18 முதல் 45 வரை | 5 % |

புதிய தொழில் தொடங்குவதற்கான விண்ணப்பம் இலவசமாக மாவட்டத் தொழில் மையம், புதிய தாமஸ் ரோடு, திருநெல்வேலி அலுவலகத்தில் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் மேற்படி அலுவலகத்தை தொடர்பு கொண்டு

பயன்பெறும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. பள்ளி கல்லூரி மாற்றுச் சான்றிதழ் - 2 நகல்கள்
2. குடும்ப அட்டை - 2 நகல்கள்
3. குடும்ப அட்டை இல்லாதவர்கள் தாசில்தாரிடம் பெறப்பட்ட இருப்பிட சான்றிதழ் - 2 நகல்கள்
4. திட்ட அறிக்கை (புராஜெக்ட் ரிப்போர்ட்) - அசல் மற்றும் நகல்
5. விலைப்பட்டியல் (கொட்டேசன்) - அசல் மற்றும் நகல்
6. சாதிச் சான்றிதழ் - நகல்

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
திருநெல்வேலி.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி